இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,413, DECEMBER 2, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation under the Irrigation Rules of Urubokka and Kirama, Southern Province.]

பெரிய பிறித்தனும் அயர்லாந்தும் ஆகிய ஐக்கிய ராச்சியத்துக்கும் கடல்களுக்கு அப்புறத்துள்ள பிறித்திஷ் ஆதிபத்திய நாடுகளுக்கும் ராஜாவும் சமயபரிபாலகருமாகிய ஐந்தாம் ஜோர்ஜ் மகத்துவ நாயகமவர்களது நாமத்தினாலே:
சென்ற் மைக்கேல் அன் சென்ற் ஜோர்ஜின் மிக மேன்மைபொருந்திய வரிசையின் கிறான்குறேஸ் நயிற் பட்டவர்த்தனரும் இலங்கைத்தீவுக்கும் அதனைத் துணைசார்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும் ஆகிய உத்தமனார் சேர் ஹென்றி எட்வாட் மெக்லம் அவர்கள் செய்யும்

## விளம்பரம்.

ஹென்றி மெக்லம்..

ஊறுபொக்க நீர்ப்பாய்ச்சல் வேலைகளினதும் கிரம நீர்ப்பாய்ச்சல் வேலைகளினதும் விஷயத்தில், நெற்காணிகளை நீர்ப்பாய்ச்சிச் செய்கைபண்ணுவதைப்பற்றிய முற்காலத்து வழக்கங்களை வலியுறுத்துவதற்காக, "1906 ம் ஆண்டின் (16 ம் இலக்க) நீர்ப்பாய்ச்சற் சட்டத்தின் 8 ம் பிரிவை அனுசரித்து, தென்மாகாணத்து அம்பாந்தோட்டையிலுள்ள மேற்குக் கிறுவைப்பற்றிற்குரிய நீர்ப்பாய்ச்சற் கம்மிற்றிச் சங்கத்தாரால் இயற்றப்பட்டவைகளாகிய, இதன் அட்டவணையிற் காட்டிய விதிகளானவை, தென் மாகாணத்து கவண்மேந்து ஏஜன்றால் மேற்படி சட்டத்தின் 20 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவைகளை அங்கீகாரம் பண்ணவாயினும் நீக்கிவிடவாயினும் நம்மிடத்தே முறைப்படி அனுப்பிவைக்கப்பட்டன; ஆதலால்—,

மேற்சொல்லிய தேசாதிபதியாகிய நாம், மேற்படி சட்டத்தின் 20 ம் பிரிவினால் நம்மீது வைக்கப்பட்ட தத்துவங்களைச் செலுத்தி, இதனோடிணைத்திருக்கும் அட்டவணையிற் காட்டிய மேற்படி விதிகளை நாம் அங்கீகாரம் பண்ணிக்கொண்டோம் என்பதை இந்த நமது விளம்பரத்தினால் அறிவிக்கின்றோமென்று நீவிர் அறிந்துகொள்வீராக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டின் நவம்பர்மாசம் இருபத்தோராந் திகதியாகிய இன்று, மேற்படி தீவில் கொழும்பிலே, கொடுக்கப்பட்டது.

உத்தமனார் கட்டளைப்படி,
எச். எல். கிறவ்பொர்டு,
அக்றிங் கலோனியல் சக்கிறத்தார்.

தேவன் இராசாவை ரட்சித்தருள்க.

---

## தென்மாகாணம் கிரம வென்னும் பகுதிக்கு நீர்ப்பாய்ச்சலுக்கான உபாயம்.

நீர்ப்பாய்ச்சற் கந்தோர் தலைவரின் பிரமாணங்கள்.

1. வேளாண்மைக் காலங்களுக் கிடையில் நீர்ப்பாய்ச்சலுக்குச் சேர்ந்த இடங்களைப் பழுதுபார்த்தற்கும் பரிபாலித்தற்குமாகக் கீழே கூறப்பட்டிருக்கின்ற காலவிடை ஆவசியகமாக விருக்கின்றது. அக்காலத்தில் வயல்களுக்குப் பங்கீடு செய்வதற்காய் எந்த மதகுகளுக் கூடாகஅல்லது எந்த வாய்க்கால்களுக் கூடாகவேனும் தண்ணீர் வெளியே விடப்படமாட்டா. அக்காலவிடையாவது ஒரு வருஷத்தில் எக்காலத்திலாவது ஒரே தொடராக நாற்பத்திரண்டு நாட்களுக்கிருக்கும். அக்காலவிடை தொடங்கவேண்டிய சரியான திகதிகள் 1906 ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல்க் கட்டளைச்சட்டத்தின் எட்டாம் பிரிவின் கீழே விதித்த அந்த அந்த விடத்து வேளாண்மைப் பிரமாணங்களால் நியமிக்கப்படும்.

2. மதகுகளிலிருந்தும் இராசாங்க வாய்க்கால்களிலிருந்தும் வெளியே விடப்படுந் தண்ணீர் அந்த அந்த வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரின் கட்டளையின்பிரகாரம் அவ்வவ் வேலைகளுக்குப் பாதுகாவலனா யிருப்பவரால் வரம்புசெய்யப்பட வேண்டியது. அவ்வுத்தியோகத்தர் அல்லது அவ்வுத்தியோகத்தரால் நியோகிக்கப்பட்ட இன்னொருவரே யல்லாமல் மற்றையோர் ஒரு குளத்தின் மதகுகளில் அல்லது வாய்க்கால்களில் அல்லது அவைகளிலிருந்து வெளியே விடப்படுந் தண்ணீரில் தலையிடுதலாகாது.

3. இராசாங்க வாய்க்கால்களி லிருக்கும் மதகுகளிலிருந்து தண்ணீர் பங்கீடுசெய்தல் அந்த வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் வரம்புசெய்யப்பட வேண்டும். அவ்வுத்தியோகத்தர் அவ்விதமாக வெளியே கொடுக்கப்பட்ட தண்ணீர் வீணிலே பாயாது தடைசெய்தற்கேற்ற ஒழுங்குகளைச் செய்யவேண்டியது.

4. இராசாங்க வாய்க்காலால் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலங்களையுடைய சொந்தக்காரர்கள் அக்காணிகளுக்கு நீர்பாய்ச்சற்கு வேண்டிய சிறு வாய்க்கால்களில் அல்லது வரம்புகளில் தங்கள் தங்கள் பங்குகளைக் கட்டுவித்தல் கடனாகவிருக்கும். அச்சிறு வாய்க்கால்களின் அல்லது வரம்புகளின் வழிகளும் நிலையங்களும் ஒவ்வொரு சொந்தக்காரனால் கட்டுவிக்கப்பட வேண்டிய பங்கும் அதன் விபரமும் ஒவ்வொரு சொந்தக்காரனுக்குமுடைய நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலத்தின் ஏக்கர்த் தொகைக்குத் தக்கதாக அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகஸ்தரால் தீர்மானிக்கப்பட வேண்டும். அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தர் மாகாண ஏசண்டருக்கு அல்லது உதவி மாகாண ஏசண்டருக்கு அவ்வித சிறு வாய்க்கால்கள் அல்லது வரம்புகள் எக்காலத்தில் எவ்விடத்தில் தேவையா யிருக்கின்றதென்று அறிவித்தல் செய்வார்.

5. சிறு வாய்க்கால்கள் அல்லது வயல் வாய்க்கால்களாலும் வரம்புகளாலும் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலங்களின் சொந்தக்காரர்களால் அவ்வாய்க்கால்களும் வரம்புகளும் நல்ல நிலைவரத்தில் வைத்துப் பரிபாலிக்கப்பட வேண்டும். அத்துடன் ஒவ்வொரு வேளாண்மைக் காலத்துக்கு முன்பாக அவ்வாய்க்கால்களைத் துப்பரவு செய்வதும் வரம்புகள் உண்டு பண்ணுவதும் அவ்வாய்க்கால்களையும் வரம்புகளையும் வேளாண்மை நடக்கிற காலம் வரைக்கும் துப்பரவாக வைத்துப் பரிபாலிக்கிறதும் அச் சொந்தக்காரரது கடமையாகும். ஒரு சொந்தக்காரன் தன் பங்குக்காகிய வாய்க்கால்களைத் துப்பரவு செய்யாமலும் அல்லது தன் பங்குக்காகிய வரம்புகளைக் கட்டுவியாமலும் தவறுங் காலத்து அந்த வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தர் அவ்விதமான புதுக்குவித்தல் அல்லது பரிபாலனஞ்செய்வித்தல் ஆவசியகமென்று மாகாண ஏசண்டருக்கு அல்லது உதவி மாகாண ஏசண்டருக்கு அறிவித்தல் செய்தால் அவர் அவ்வேலைகளைச் செய்வித்து அந்தச் செலவைத் தவறிப்போன சொந்தக்காரனிடத்தில் அறவிடவேண்டும்.

6. அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரின் கட்டளையின்றி யாதாமொரு வாய்க்காலிலாவது அணைகட்டப்படாது.

7. அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயுள்ள நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தரால் இராசாங்க வாய்க்கால் வழிகளால் அல்லது வேறு வழிகளால்க் கொடுக்கப்பட்ட தண்ணீர்ரத்தங்கள் பொறுப்பிலிருக்கும் பல வயல்களுக்கும் அல்லது வயல் நாடுகளுக்கும் சரியாகப் பங்கீடுசெய்வது 1906 ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் நாலாம் அத்தியாயத்துக் குட்பட நியமிக்கப்பட்ட நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரர்களின் கடைமையா யிருக்கும். அத்தலைமைக்காரர்கள் மாகாண ஏசண்டர் அல்லது உதவி மாகாண ஏசண்டரின் ஆஞ்ஞையின் கீழிருப்பார்கள், அவர்க வேலையினின்று நீக்குவதும் மாகாண ஏசண்டர் அல்லது உதவி மாகாண ஏசண்டர் பொறுப்பாகவே யிருக்கும்.

8. நீர்ப்பாய்ச்சலுக்காகத் தண்ணீர் சேகரிக்கப்பட்டிருக்குமிடங்களில் நீர்ப்பாய்ச்சல்த் தலைவருக்கு அல்லது அந்த வேலைகளுக்குப் பொறுப்பாக விருக்கும் அவருடைய உத்தியோகத்தருக்கு ஒரு போகத்துக்குமேல வேளாண்மைசெய்ய அந்த விடத்தில் உள்ள தண்ணீர் போதுமானதல்ல அல்லது ஒருவேளை போதுமானதா யிருக்கமாட்டாதென்று தோற்றினால் அல்லது நீர்ப்பாச்சப்படக்கூடிய முழு நிலத்துக்கும் ஒரு போகத்துக்குத்தானும் அத்தண்ணீர் போதுமானதா யிருக்க மாட்டாதென்று தோற்றினால் அவற்றைக்குறித்து அறிவித்தல்கள் அனுப்பவேண்டிய தாவசியகமென் றுலோசித்தாலும் அவை காரணம்பற்றி விளைவிக்கவேண்டிய பூமியின் விசாலத்தைக் குறைக்கவேண்டிய தாவசியகமென் றுலோசித்தாலும் உதவி மாகாண ஏசண்டர் அவ்விதமாகக் குறைக்கப்பட்ட எவ்வளவு பூமி அல்லது வயல்கள் விளைவிக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்து அந்த வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தருக்கு அறிப்படுத்தினால் அவ்வளவு பூமி அல்லது வயல்களின் விளைவுக்குப் போதுமான தண்ணீர் மாத்திரம் கொடுக்கப்படும்.

9. அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தரால் இப்பிரமாணங்கள் நடாத்தப்பட வேண்டும். 1906 ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல்க் கட்டளைச்சட்டத்தின்படி இப்பிரமாணங்களை மீறுவோர்கள் ஆக்கினைபண்ணப்படுவார்கள்.

### கிரம ஓயா நீர்ப்பாய்ச்சலுக்கான உபாயம்.

#### கிருஷிக பிரமாணங்கள்.

1. மேலே கூறப்பட்டிருக்கும் நீர்ப்பாய்ச்சலுக்கான வேலையின் கீழே நடாத்தப்படவேண்டிய விதைப்புக்காலங்கள் "மஹா" "யாலா" என்னும் இரு போகங்களாக எல்லைப்படுத்தப்பட வேண்டும்.

2. "யாலா" போகத்து விதைப்பு மாசிமீ 12 ந் திகதிக்கும் வைகாசிமீ 31 ந் திகதிக்கு மிடையில் நடத்தப்பட வேண்டும். "மஹா" போகத்து விதைப்பு ஆனிமீ 15 ந் திகதிக்கும் புரட்டாதிமீ 30 ந் திகதிக்கு மிடையில் நடத்தப்பட வேண்டும்.

3. "மஹா" போகத்து விதைப்புக்காலத்தில் ஆனிமீ 15 ந் திகதிக்கும் அவணிமீ 31 ந் திகதிக்கு மிடையில் "மாவி" நெல்லு விதைக்கப்படலாம். ஆவணிமீ 31 ந் திகதிக்கும் புரட்டாதிமீ 15 ந் திகதிக்குமிடையில் "மாவி" நெல்லேயல்லாத வேறு எந்த நெல்லும் விதைக்கப்படலாம். புரட்டாதிமீ 15 ந் திகதிக்கும் 30 ந் திகதிக்கு மிடையில் "தன" நெல்லு அல்லது 60 நாள் நெல்லு விதைக்கப்படலாம்.

4. ஒவ்வொரு போக விதைப்பு முடிகிறவரையில் சொந்தக்காரரின் நிலங்களுக்குள் மாடு எருமை முதலியன வைத்திருக்கலாம். விதைப்பு முடிந்த ஒரு நாளைக்குள் எல்லா மாடுகளும் எருமைகள் முதலியனவும் வேளாண்மை செய்யப்பட்ட நிலங்களிலிருந்து ஏறக்குறைய இரண்டு கட்டை தூரத்துக்கப்பாலுள்ள மேய்ச்சல் நிலங்களுக்குக் கொண்டுபோகப்படவேண்டும் அல்லது கட்டி மேய்க்கப்பட வேண்டும்.

5. வயல்களின் கருமாதிகாரிகள் விதைப்புமுடிந்த 15 நாட்களுக் கிடையில் நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரனுக்குத் தாங்கள் வேளாண்மை செய்கைக்காரராக நியமித்த ஆட்களினது இடாப்பு ஒவ்வொரு வேளாண்மை செய்கைக்காரரும் செய்கைபண்ணின நிலத்தினதி விசாலத்துடன் கொடுக்கவேண்டியது.

6. வயலின் கருமாதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரனுக்கு அறிவித்தல் செய்யாவிட்டாலும் ஒரு வேளாண்மை செய்கைக்காரனுக்காக வேறு பதிலாள் விடப்பட மாட்டா.

7. வயல்களின் கருமாதிகாரிகள் அருவி அறுத்தவுடனே வேளாண்மை செய்கைக்காரருக்குப் போகவேண்டியதை வயலிலே தீர்த்துப்போட வேண்டியது.

8. ஒவ்வொரு போகத்துக்கும் ஒவ்வொரு அவண் விதைப்புவிசாலத்துக்கும் நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரனுக்கு (8) குறுணி நெல்லும், விதானை ஆராய்ச்சிக்கு (2) குறுணி நெல்லும் அவர்கள் செய்த ஊழியத்துக்குக் கைமாறுகக் கொடுபட வேண்டும். அவர்களும் அதன்பேரால் தாங்கள் பெற்றுக்கொண்ட நெல்லுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும். விதானை ஆராய்ச்சிமார் தங்கள் தங்கள் பிரிவுகளுககுச் சம்பளம் பெறுத நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரரா யிருத்தல் வேண்டும்.

9. வேளாண்மை செய்கைக்காரர் அல்லது காணிகளின் சொந்தக்காரர் வெல்விதானைக்கு விண்ணப்பஞ்செய்ய அவர் விதானை ஆராய்ச்சியால் மேற்கையொப்பமிடுவித்து எழுத்திலே தண்ணீர் கொடுக்கப்படவேண்டும் அல்லது நிறுத்தப்பட வேண்டுமென்று பிரார்த்தனை செய்யவேண்டும். இந்த விண்ணப்பம் எந்த வயல்நாட்டுக்காகச் செய்யப்பட்டதோ அதனையும் அதன் விசாலத்தையும் அப்பிரார்த்தனையிற் காட்டவேண்டும். அவ்விதமான பிரார்த்தனைகள் எல்லாவற்றின் கோப்பிகள் ஒவ்வொரு வேளாண்மைக்கும் தொடராக இலக்கமிட்டு வெல்விதானைமார் வைத்திருக்கவேண்டும்.

---

[Notification of Rules, framed by the Director of Irrigation, relating to Urubokka and Kirama, Southern Province.]

அறிவித்தல்.

1906 ம் ஆண்டின் நீர்ப்பாச்சல்க் கட்டளைச் சட்டத்தின் 56 ம் பிரிவு (3) ம் கீழ்ப்பிரிவுக் கடக்கமாகவும், தெற்கு மாகாணத்து அரசாட்சி ஏசண்டரோடு ஆலோசனைபண்ணியதின் பின்னும், நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைமைத்துரையது அதிகாரத்தின்கீழும் பராமரிப்பின்கீழும் வைக்கப்பட்டிருப்பவைகளாகிய தெற்கு மாகாண அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கிலிருக்கும் உறுபொக்க கிரமை என்னப்படு மிரு நீர்ப்பாய்ச்சல் வேலைக்காக, நீர்ப்பாய்ச்சல் பகுதித் தலைமைத் துரையால் உண்டுபண்ணப்பட்டு பின் அட்டவணையிற் கூறப்படும் பிரமாணங்கள், அதிகார மந்திரசபையோடுகூடிய தேசாதிபதியவர்களின் அங்கீகாரம்பெற்று பொது விளம்பரத்துக்காக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன; அவைகள் இந்தத் தேதி முதலாகவும் அதன்பின்னும் வழங்கத்தொடங்கும்.

தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

எச். எல். கிறேவோட்,
அக்றிங் இராசாங்க லிகிதர்.

## தென்மாகாணம் உறுபொக்கவென்னும் பகுதிக்கு நீர்ப்பாய்ச்சலுக்கான உபாயம்.

### நீர்ப்பாய்ச்சற் கந்தோர் தலைவரின் பிரமாணங்கள்.

1. வேளாண்மைக் காலங்களுக் கிடையில் நீர்ப்பாய்ச்சலுக்குச்சேர்ந்த இடங்களைப் பழுதுபார்த்தற்கும் பரிபாலித்தற்குமாகக் கீழே கூறப்பட்டிருக்கின்ற காலவிடை ஆவசியகமாக விருக்கின்றது. அக்காலத்தில் வயல்களுக்குப் பங்கீடு செய்வதற்காய் எந்த மதகுகளுக்கூடாக அல்லது எந்த வாய்க்கால்களுக்கூடாகவேனும் தண்ணீர் வெளியே விடப்படமாட்டா. அக்கால விடையாவது ஒரு வருஷத்தில் எக்காலத்திலாவது ஒரே தொடர்ச்சியாக முப்பது நாட்களுக்கிருக்கும். அக்காலவிடை தொடங்கவேண்டிய சரியான திகதிகள் 1906 ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல் கட்டளைச்சட்டத்தின் எட்டாம் பிரிவின்கீழே விதித்த அந்த அந்தவிடத்து வேளாண்மைப் பிரமாணங்களால் நியமிக்கப்படும்.

2. மதகுகளிலிருந்தும் இராசாங்க வாய்க்கால்களிலிருந்தும் வெளியே விடப்படும் தண்ணீர் அந்த அந்த வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரின் கட்டளையின் பிரகாரம் அவ்வவ்வேலைகளுக்குப் பாதுகாவலனாயிருப்பவரால் வரம்புசெய்யப்பட வேண்டியது அவ்வுத்தியோகத்தர் அல்லது அவ்வுத்தியோகத்தரால் நியோகிக்கப்பட்ட இன்னொருவரேயல்லாமல் மற்றையோர் ஒரு குளத்தின் மதகுகளில் அல்லது வாய்க்கால்களில் அல்லது அவைகளிலிருந்து வெளியேவிடப்படுந் தண்ணீரில் தலையிடுதலாகாது.

3. இராசாங்க வாய்க்கால்களிலிருக்கும் மதகுகளிலிருந்து தண்ணீர் பங்கீடுசெய்தல் அந்த வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் வரம்பு செய்யப்படவேண்டும் அவ்வுத்தியோகத்தர் அவ்விதமாக வெளியே கொடுக்கப்பட்ட தண்ணீர் வீணிலே பாயாது தடைசெய்தற்கேற்ற ஒழுங்குகளைச் செய்யவேண்டியது.

4. இராசாங்க வாய்க்காலால் நீர்பாய்ச்சப்படக்கூடிய நிலங்களையுடைய சொந்தக்காரர்கள் அக்காணிகளுக்கு நீர்பாய்ச்சற்கு வேண்டிய சிறு வாய்க்கால்களில் அல்லது வரம்புகளில் தங்கள் தங்கள் பங்குகளைக் கட்டுவித்தல் கடனாகவிருக்கும் அச்சிறு வாய்க்கால்களின் அல்லது வரம்புகளின் வழிகளுந் நிலையங்களும் ஒவ்வொரு சொந்தக்காரனால் கட்டுவிக்கப்படவேண்டிய பங்கும் அதன் விபரமும் ஒவ்வொரு சொந்தக்காரனுக்குமுடைய நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலத்தின் ஏக்கர்த் தொகைக்குத்தக்கதாக அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் தீர்மானிக்கப்பட வேண்டும். அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தர் மாகாண ஏசண்டருக்கு அல்லது உதவி மாகாண ஏசண்டருக்குஅவ்வித சிறு வாய்க்கால்கள் அல்லது வரம்புகள் எக்காலத்தில் எவ்விடத்தில் தேவையா யிருக்கின்றதென்று அறிவித்தல் செய்வார்.

5. சிறு வாய்க்கால்கள் அல்லது வயல் வாய்க்கால்களாலும் வரம்புகளாலும் நீர்பாய்ச்சப்படக்கூடிய நிலங்களின் சொந்தக்காரர்களால் அவ்வாய்க்கால்களும் வரம்புகளும் நல்ல நிலைபரத்தில் வைத்துப் பரிபாலிக்கப்படவேண்டும். அத்துடன் ஒவ்வொரு வேளாண்மைக் காலத்துக்குமுன்பாக அவ்வாய்க்கால்களைத் துப்பரவுசெய்வதும் வரம்புகள் உண்டு பண்ணுவதும் அவ்வாய்க்கால்களையும் வரம்புகளையும் வேளாண்மைநடக்கிற காலம்வரைக்கும் துப்பரவாகவைத்துப் பரிபாலிக்கிறதும் அச்சொந்தக்காரரது கடமையாகும். ஒரு சொந்தக்காரன் தன் பங்குக்காகிய வாய்க்கால்களைத் துப்பரவுசெய்யாமலும் அல்லது தன் பங்குக்காகிய வரம்புகளைக் கட்டுவியாமலும் தவறுங்காலத்து அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தர் அவ்விதமான புதுக்குவித்தல் அல்லது பரிபாலனஞ்செய்வித்தல் ஆவசியகமென்று மகாண ஏசண்டருக்கு அல்லது உதவி மாகாண ஏசண்டருக்கு அறிவித்தல்செய்தால் அவர் அவ்வேலைகளைச் செய்வித்து அந்தச் செலவைத் தவறிப்போன சொந்தக்காரனிடத்தில் அறவிடவேண்டும்.

6. அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரின் கட்டளையின்றி யாதாமொரு வாய்க்காலிலாவது அணைகட்டப்படாது.

7. அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயுள்ள நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தரால் இராசாங்க வாய்க்கால் வழிகளால் அல்லது வேறு வழிகளால்க் கொடுக்கப்பட்ட தண்ணீரைத் தங்கள் பொறுப்பிலிருக்கும் பல வயல்களுக்கும் அல்லது வயல் நாடுகளுக்கும் சரியாகப் பங்கீடுசெய்வது 1909 ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் நாலாம் அத்தியாயத்துக்குட்பட நியமிக்கப்பட்ட நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரர்களின் கடமையாயிருக்கும். அத்தலைமைக்காரர்கள் மாகாண ஏசண்டர் அல்லது உதவி மாகாண ஏசண்டரின் ஆஞ்ஞையின் கீழிருப்பார்கள். அவர்களை வேலையினின்று நீக்குவதும் மாகாண ஏசண்டர் அல்லது உதவி மாகாண ஏசண்டர் பொறுப்பாகவேயிருக்கும்.

8. நீர்ப்பாய்சலுக்காகத் தண்ணீர் சேகரிக்கப்பட்டிருக்கு மிடங்களில் நீர்ப்பாயச்சல்த் தலைவருக்கு அல்லது அந்த வேலைகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் அவருடைய உத்தியோகத்தருக்கு ஒரு போகத்துக்குமேல் வேளாண்மைசெய்ய அந்த விடத்தில் உள்ள தண்ணீர் போதுமானதல்ல அல்லது ஒருவேளை போதுமானதா யிருக்கமாட்டாதென்று தோற்றினால் அல்லது நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய முழுநிலத்துக்கும் ஒரு போகத்துக்குத் தானும் அத்தண்ணீர் போதுமானதாயிருக்க மாட்டாதென்று தோற்றினால் அவற்றைக்குறித்து அறிவித்தல்கள் அனுப்பவேண்டியது ஆவசியகமென்றுலோசித்தாலும் அவைகாரணம்பற்றி விளைவிக்கவேண்டிய பூமியின் விசாலத்தைக் குறைக்கவேண்டியது ஆவசியகமென்றுலோசித்தாலும் உதவி மாகாண ஏசண்டர் அவ்விதமாகக் குறைக்கப்பட்ட எவ்வளவு பூமி அல்லது வயல்கள் விளைவிக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்து அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தருக்கு அறியப்படுத்தினால் அவ்வளவு பூமி அல்லது வயல்களின் விளைவுக்குப் போதுமான தண்ணீர்மாத்திரம் கொடுக்கப்படும்.

9. அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தரால் இப்பிரமாணங்கள் நடாத்தப்பட வேண்டும். 1906 ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல்க் கட்டளைச்சட்டத்தின்படி இப்பிரமாணங்களை மீறுவோர்கள் ஆக்கினை பண்ணப்படுவார்கள்.

## உறுபொக்க என்னும் பகுதிக்கு நீர்ப்பாய்ச்சலுக்கான உபாயம்.

### கிருஷிகப் பிரமாணங்கள்.

1. மேலே கூறப்பட்டிருக்கும் நீர்ப்பாய்ச்சலுக்கான வேலையின்கீழே நடாத்தப்படவேண்டிய விதைப்புக்காலங்கள் "மஹா" "யாலா" என்னும் இருபோகங்களாக எல்லைப்படுத்தப்படவேண்டும்.

2. "யாலா" போகத்து விதைப்பு தைமாதம் (15) ந் திகதிக்கும் பங்குனிமாதம் 31 ந் திகதிக்கு மிடையில் நடாத்தப்படவேண்டும். "மஹா" போகத்து விதைப்பு புரட்டாதிமாதம் முதலாந் திகதிக்கும் கார்த்திகைமாதம் 30 ந் திகதிக்கு மிடையில் நடாத்தப்படவேண்டும். மண்டாடுவா வாய்க்காலின் கீழேயுள்ள நிலங்களின் விதைப்பு புரட்டாதிமாதம் முதலாந் திகதிக்கும் பங்குனிமாதம் 31 ந் திகதிக்கு மிடையில் எந்தக்காலத்திலாவது நடைபெறலாம்.

3. "மஹா" "யாலா" போகங்களுக்கு முன்பாக எந்தக்காலத்திலாவது அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் அந்த நீர்ப்பாய்ச்சல் உபாயத்தால் நீர்ப்பாய்ச்சப்படுகின்ற எல்லா வயல்களின் வேளாண்மைக்கும் தண்ணீர் போதுமானதல்லவென்று உதவி மாகாண ஏசண்டருக்கு அறிவித்தல் செய்யப்பட்டால் அவ்வுதவி மாகாண ஏசண்டர் "மஹா" அல்லது "யாலா" போகத்துக்கு எவ்வளவு வயல் விதைக்கப்படவேண்டுமென்று தீர்மானஞ்செய்ய வேண்டும். யாவரேனும் உதவி மாகாண ஏசண்டரால் தீர்மானஞ்செய்யப்பட்ட தல்லாத வேறு வயல்களை விதைத்தல் குற்றத்துக்கிடனாகும்.

4. ஒவ்வொரு போகவிதைப்பு முடிகிறவரையில் சொந்தக்காரரின் நிலங்களுக்குள் மாடு எருமை முதலியன வைத்திருக்கலாம் விதைப்பு முடிந்த ஒரு நாளைக்குள் எல்லா மாடுகளும் எருமைகள் முதலியனவும் வேளாண்மை செய்யப்பட்ட நிலங்களிலிருந்து ஏறக்குறைய இரண்டுகட்டை தூரத்துக் கப்பாலுள்ள மேய்ச்சல் நிலங்களுக்குக் கொண்டுபோகப்பட வேண்டும் அல்லது கட்டி மேய்க்கப்பட வேண்டும்.

5. வயல்களின் கருமாதிகாரிகள் விதைப்புமுடிந்த 15 நாட்களுக்கிடையில் நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரனுக்குத் தாங்கள் வேளாண்மை செய்கைக்காரராக நியமித்த ஆட்களினது இடாப்பு ஒவ்வொரு வேளாண்மை செய்கைக்காரரும் செய்கைபண்ணின நிலத்தினது விசாலத்துடன் கொடுக்கவேண்டியது.

6. வயலின் கருமாதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப் படாவிட்டாலும் நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரனுக்கு அறிவித்தல் செய்யாவிட்டாலும் ஒரு வேளாண்மை செய்கைக்காரனுக்காக வேறு பதிலாள் விடப்படமாட்டா.

7. வயல்களின் கருமாதிகாரியங்கள் அருவி அறுத்தவுடனே வேளாண்மை செய்கைக்காரருக்குப் போகவேண்டியதை வயலிலே தீர்த்துப்போட வேண்டியது.

8. ஒவ்வொரு போகத்துக்கும் ஒவ்வொரு அவணவிதைப்பு விசாலத்துக்கும் நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரனுக்கு (8) குறுணி நெல்லும் விதானை ஆராய்ச்சிக்கு (2) குறுணி நெல்லும் அவர்கள்செய்த ஊழியத்துக்குக் கைமாறாகக் கொடுபடவேண்டும். அவர்களும் அதன்பேரால் தாங்கள் பெற்றுக்கொண்ட நெல்லுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும். விதானை ஆராய்ச்சிமார் தங்கள் தங்கள் பிரிவுகளுக்குச் சம்பளம்பெறாத நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரரா யிருத்தல் வேண்டும்.

---

[Notification of By-laws relating to Rabies, Local Board Matara.]

1893 ம் ஆண்டு விசர்நாய்ச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி மாத்தறை லோக்கல்போட் சங்கத்தாரால் உண்டாக்கப்பட்டதும் மந்திராலோசனைச் சபையாரின் ஆலோசனையுடன் தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டதுமான பின்வரும் பிரமாணங்கள் யாவரும் அறியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது.

உத்தமனுரவர்கள் கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1910 ம் ஞு கார்த்திகைமீ 24 ந் உ.

எச். எல். கிறுவ்பொர்டு,
இராசாங்க லிகிதரின் வேலைபார்ப்பவர்.

1893 ம் ஆண்டு 7 ம் இலக்க விசர்நாய்ச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி உண்டாக்கிய பிரமாணங்கள்.

(a) லோக்கல் போட் சங்கத்தார் தமது அரசாட்சி எல்கைக்குள் யாதாமொரு இடத்தில் நாய் விசர் தோற்றப் போகிறதென்று பிரசித்தப்படுத்தினவுடன் நாய்களின் உரிமைக்காரர் ஒவ்வொருவரும் தனது நாயை அறிவித்தலில் சொல்லிய காலத்தில் பிரசித்த வீதியில் போகும்போது அல்லது சொல்லப்பட்ட இடத்தில் வைத்திருக்கும்போது வாய் மூடி போட்டு அல்லது ஓர் சங்கிலியில் கட்டிவிடவேண்டும் மூடி போட்டிருக்கும்போது மனிதரை அல்லது மிருகத்தை நாய்கடிக்க இயலாமலும் இலகுவில் மூச்சுவிட தண்ணீர் குடிக்க தடைபண்ணுதபடியும் வாய்மூடி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(b) மேல்சொல்லிய பிரகாரம் வாய் மூடி போடாமல்விட்டால் அல்லது கழுத்தில் பெலமாகத் தொடுக்கப்பட்ட பட்டி அல்லது சங்கிலியால் தகுந்த ஒருவர் கொண்டுபோகாமல் விட்டால் நாய் சரியாய்க் கட்டப்பட்டதென்று ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(c) வாய்மூடி இல்லாமலும் அல்லது பட்டி அல்லது சங்கிலிபோட்டுக் கொண்டுபோகாமலும் பிரசித்த வீதியில் அல்லது சொல்லப்பட்ட இடத்தில் காணப்படும் நாய் பொலிஸ் உத்தியோகத்தனால் அல்லது லோக்கல்போட் சபாநாயகரால் நியமிக்கப்படும் வேறு அதிகாரியால் பிடிபட்டுக் கிட்டின நாய்ப்பட்டிக்குக் கொண்டுபோகப்பட்டுபின்சொல்லிய பிரகாரம் நடத்தப்படும்.

(1) நாய்க்கு விசராகில் அல்லது விசராயிருக்கு மென்று எண்ணப்பட்டால் நாய் உடனே கொல்லப்படும்.

(2) நாய்க்கு விசரில்லாவிட்டால் பட்டியில் மறிக்கப்படும் நாயின் உரித்தாளி அல்லது காவல்காறன் யாரென்று தெரிந்தால் லோக்கல்போட் சபாநாயகரால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தன் நாய் தடைபண்ணப்பட்டதைப்பற்றி உரித்தாளிக்கு அல்லது காவற்காரனுக்கு அறிவிக்கவேண்டும். நாயும் இப்பிரமாணங்களுக்கு அமைய தடைபண்ணிய செலவு கொடுத்தவுடன் உரித்தாளிக்குக் கொடுபட வேண்டும்.

(3) பிடிபட்ட நாய் மூன்று நாட்களுள் உரிமை பாராட்டப்படாவிட்டால் அல்லது மேறசொல்லிய பிரகாரம் அறிவித்தல் கொடுத்த இரண்டு நாட்களுள் உரிமைக்காரன் நாயைக் கொண்டுபோகாமல்விட்டால் லோக்கல்போட் சபாநாயகர் அந்த நாயை கொல்லும்படி அல்லது வேறு விதமாய் நடத்தும்படி கட்டளை யிடலாம்.

(4) தடைபண்ணிய நாயின் உரிமைக்காரன் அல்லது காவற்காரன் பின்சொல்லப்படும் செலவுகொடுக்க வேண்டும். தடைபண்ணிய ஒவ்வொரு நாளுக்கு 50 சதம் நாய்க்கு விசரில்லாவிட்டால் இச்செலவு நாயின் விற்பனவினால் அறவிடப்படும். விற்பனவுக்குமுன் உரித்தாளி செலவுகொடாவிட்டால் கோட்டுமூலமாய் அறவிடப்படும்.

1910 ம் ஆண்டு மார்கழிமாதம் தொடக்கம் ஒரு வருடத்துக்கு இப்பிரமாணங்கள் செலுத்தப்படும்.

---

[Notification of By-law relating to driving vehicles through a Public Park, Local Board, Matara.]

1898 ம் ஆண்டு 13 ம் இலக்கச் சட்டத்தின் 56 (11) ம் பிரிவில் கற்பிக்கப்பட்ட பின்வரும் துணைப்பிரமாணத்தை (by-law) மாத்துறை நகரசபையார் உத்தம தேசாதிபதியவர்களிடங் காண்பித்ததில் அவர்கள் மகாமந்திரசபையாரின் ஆலோசனைப்படி சரிகண்டபடியால் அதை ஊரவர்களறிய இத்தால் பிரசித்தப்படுகிறது.

உத்தமதேசாதிபதியின் உத்தரவின்படிக்கு,

கொழும்பு, கொலோனியல் சக்றுத்தார்
கந்தோர், 1910 ம் ஆண்டு கார்த்திகை மீ 28 ந் உ.

எச். எல். கிறுவ்பொர்டு,
இராசாங்க லிகிதரின் வேலைபார்ப்பவர்.

மேற்சொல்லிய துணைப்பிரமாணமாவது.

இரண்டு சில்லுச் சூத்திரவண்டி அதாவது (bi-cycle) வேறு எந்த வண்டிலேயாவது பிரசித்த மூத்த வெளிக்கூடாக யாதாமொருவரும் சவாரிபண்ணவும் கொண்டுபோகவுங் கூடாது.

---

[Notification of By-laws relating to the burial and removal of Night-soil, Local Board, Kurunegala.]

1898 ம் ஆண்டின் 13 ம் சட்டத்தின் 56 ம் பிரிவின் 21 ம் உட்பிரிவின் பிரகாரம், குருனாக்கல் சுகாதாரசங்கத்தவர்களால் ஆக்கப்பட்ட பின்னால் வரும் உபவிதிகள், அதிகார சபையாரது யோசனைப்படி தேசாதிபதி யவர்களால் உறுதிப் படுத்தப்பட்டு யாவரும் அறியும்படி இத்தால் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

அதியுத்தம ரவர்களின் ஆஞ்ஞைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொளும்பு, 1910 ம் ஞு நவம்பர்மீ 28 ந் உ.

எச். எல். கிறுவ்பொர்டு,
இராசாங்க லிகிதரின் வேலைபார்ப்பவர்.

முன்குறித்த உபவிதிகள்.

1. எவ்விதமான வீடு, அல்லது கட்டிடம், அல்லது காணி என்பவற்றிலும் வசிப்போரை அல்லது அவற்றின் சொந்தக்காரனை (*a*) வசிக்குமிடத்தில் மலக்குழி யிருப்பின் அதை மூடும்படியும் அல்லது (*b*) வசிக்குமிடத்தில் மலத்தை தாழ்க்கை முதலிய செய்து நீக்கிவரின் அதைச் செய்யா தொழியும்படியும், அதற்குப் பதிலாக மலவாளியொன்று வைக்கும்படியும் சங்கத்தவரின் தீர்மானப்படி அதிகாரம் அளிக்கப்பட்ட அக்கிராசனாதிபர் எழுதி அறிவித்துச் செய்விக்கலாம்.

2. எவ்வீட்டுக்காரனும், அவ்வீட்டுப் பக்கங்களில், அல்லது அக்கிராசனாதிபதி அங்கீகரிக்கும் வேறு இடங்களில் மலத்தை தாழ்க்க அல்லது வேறுவிதமாக நீக்க அக்கிராசனாதிபதி யவர்கள் எழுத்தில் உத்தரவு கொடுக்கலாம். அக்கிராசனாதிபதியின் உத்தரவின்றி வீட்டுப்பக்கங்களில் மலத்தைத் தாழ்க்கும் அல்லது வேறு விதமாக நீக்கும் வீட்டுக்காரன் எவனோ அவன் குற்றவாளியாவான்.

3. மேற்சொல்லப்பட்ட 1 ம் உபவிதியின் பிரகாரம் விளம்பரம் அனுப்பப்பட்ட வீட்டுக்காரன் அல்லது 2 ம் உபவிதியின் பிரகாரம் உத்தரவுபெறாத வீட்டுக்காரன், சங்கத்தவர்களால் மலநீக்கத்துக்கென்று நியமிக்கப்பட்ட ஒரு இடத்துக்கு, தன் வீட்டின் பக்கத்திலுள்ள மலத்தை அகற்றிக்கொண்டுபோக விடவேண்டும்.

4. சுகாதாரசங்கத்தின் உத்தியோகத்தனை மலமகற்றும்படியாக வேலைகொண்ட ஒவ்வொருவரும், தன் வளவில் மலமகற்றும்படி வைத்திருக்கும் ஒவ்வொரு வாளிக்கும் மாதம் 2 ரூபாய்க்குக் கூடாமல் அக்கிராசனாதிபதியால் தீர்மானிக்கப்பட்ட தொகைப்பணத்தை முன்னேற சங்கத்தாருக்குக் கொடுக்கவேண்டும்.

கொடுக்கவேண்டிய பணத்தை அந்தந்த மாதத்தின் 10 ந் திகதியிலன்று அல்லது அதற்குமுன் கொடுக்காவிட்டால் அக்கிராசனாதிபதி அதைப் பொலிஸ் நீதிபதிக்கு அறிவித்து, நீதிபதியால் விதிக்கப்பட்ட தெண்டம் எவ்விதமாக அறவிடப்படுமோ அவ்விதமாக்வே இதையும் அறவிடுவார்.

---

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 614, N. P.**—1911 ம் ஆண்டு தைமாதம் 18 ந் திகதி முல்லைத்தீவில் தன் ஆபீசில் வட மாகாணத்து முல்லைத்தீவு கவண்மேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது ஆட்சி பெலப்பிக்கப்படும். 20 காணித்துண்டுகள், வட மாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக்கின் வவுனியா வடக்குப்பகுதியி லிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | ஏக்கரொன்றின் தரிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| பிளான் இலக்கம் 3,055. மாறுஇலுப்பை. உரித்தாளி—சின்னட்டி வீரகத்தி. | | | | | | | |
| 11368 | பனையடியில்தறை | — | வயல் | 0 | 1 | 4 | 20* |
| பிளான் இலக்கம் 3,605. தண்டுவான். உரித்தாளி—முடி. | | | | | | | |
| 13412 | யார்காட்டுநிலம் | கந்தர் பெரியதம்பி | தோட்டத்திற்கேற்ற வெளி நிலம் | 0 | 3 | 33 | 15 |
| பிளான் இலக்கம் 3,661. காதலியார்சமளங்குளம். உரித்தாளி—மினுயர் தம்பையா. | | | | | | | |
| 95 | தோட்டநிலம் | — | புகையிலைத்தோட்டம் | 0 | 1 | 20 | 20* |
| பிளான் இலக்கம் 3,662. மாமடு. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 97 | காட்டாமணக்கடியில்தோட்டம் | கந்தர் கணபதிப்பிள்ளை | தோட்டத்திற்கேற்ற வெளி நிலம் | 0 | 3 | 18 | 15 |
| 98 | ஷை | — | பாதைக்கு விடப்பட்ட நிலம் | 0 | 0 | 27 | — |
| உரித்தாளி—சங்கரப்பிள்ளை கந்தவனம். | | | | | | | |
| 99 | மாவடிவளவு | — | தோட்டம் | 0 | 0 | 27 | 20* |
| உரித்தாளி—முடி. | | | | | | | |
| 100 | புளியடியிதோட்டம் | — | பாதைக்கு விடப்பட்ட நிலம் | 0 | 0 | 10 | — |
| உரித்தாளி—பூதர் சங்கரப்பிள்ளை. | | | | | | | |
| 103 | போயிலைத்தோட்டம் | — | புகையிலைத்தோட்டம் | 0 | 0 | 7 | 20* |
| உரித்தாளி—வேலாயுதர் கிட்ணன். | | | | | | | |
| 104 | ஆத்தியடிவளவு | — | தோட்டம் | 0 | 0 | 11 | 20* |
| உரித்தாளி—முடி. | | | | | | | |
| 105 | வேம்படியில்வயல் | ச. விஞசித்தம்பி பொ. வி. | நெல்லுக்கேற்ற வெளிநிலம் | 2 | 1 | 3 | 15 |
| உரித்தாளி—காசிநாதர் விஞசித்தம்பியும் மறுவும். | | | | | | | |
| 106 | சாளம்பையடிகாணி | — | வயல் | 0 | 3 | 26 | 20* |
| உரித்தாளி முடி. | | | | | | | |
| 107 | பணிச்சையடியில்வயல் | — | பாதைக்குவிடப்பட்ட நிலம் | 0 | 1 | 38 | — |
| 108 | ஷை | ச. விஞசித்தம்பி, பொ. வி. | தோட்டத்திற்கேற்ற காடு | 8 | 0 | 37 | 15 |
| பிளான் இலக்கம் 3,678. அனந்தர்புளியங்குளம். உரித்தாளி—முடி. | | | | | | | |
| 134 | புளியடித்தோட்டம் | — | பாதைக்குவிடப்பட்ட நிலம் | 0 | 0 | 6 | — |
| 135 | ஷை | கதிரவேலு சின்னையா உடையார் | தோட்டத்திற்கேற்ற காடு | 2 | 0 | 14 | 15 |
| பிளான் இலக்கம் 3,693. கோடாலிக்கல்லு. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 174 | கீள்காட்டு தறைக்காடு | சண்முகம் விஞசித்தம்பி | நெல்லுக்கேற்ற காடு | 1 | 0 | 27 | 15 |
| 175 | ஷை | — | ஆற்றுக்குவிடப்பட்ட நிலம் | 0 | 1 | 27 | — |
| 176 | * ஷை | சண்முகம் விஞசித்தம்பி | நெல்லுக்கேற்ற காடு | 2 | 0 | 4 | 15 |
| உரித்தாளி—சண்முகம் விஞசித்தம்பி. | | | | | | | |
| 177 | பராசடியில்காட்டுவயல் | — | வயல் | 1 | 1 | 9 | 30* |
| உரித்தாளி—முடி. | | | | | | | |
| 178 | கீள்காட்டுத்தறைக்காடு | — | ஆற்றுக்குவிடப்பட்ட நிலம் | 0 | 1 | 30. | — |

*இவை அருதனங்கள்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் முல்லைத்தீவு அரசாட்சி உதவி ஏசன்றுத்துரை யவர்களிடத்திலும், படங்களைப்பற்றி சர்வேயர் ஜனறல் துரை யவர்களிடத்திலும் கேட்டறிந்துகொள்ளலாம்.

கலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் வூ கார்த்திகைமீ 22 ந் உ.

எச். எல். கிறுவ்பொர்டு,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

**No. 615, N. P.**—1911 ம் ஆண்டு தைமாதம் 10 ந் திகதி செவ்வாக்கிழமை காலமே 11 மணியளவில் தன் ஆபிசில் வடமாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், விற்கப்படும் அல்லது உரித்து முடிவுசெய்யப்படும். 12 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வலிகாமம் கிழக்குமுதலிய பகுதியி லிருக்கின்றது.

பிளான் இலக்கம் 3,696. குறிச்சி—இருபாலை.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரன் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | ஏக்கரொன்றுக்கு பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 188 | கே. எஸ். இராமலிங்கம் | வைத்தீஸ்பரன் கோயில் | பரவைக்குளம் | 2 | 1 | 18 | 15 |

பிளான் இலக்கம் 3,629. குறிச்சி—தும்பளை.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரன் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | ஏக்கரொன்றுக்கு பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| A | கே. பரமுப்பிள்ளை | ஆள்வார் சுப்பிரமணியமும் பெண் நாகமுத்துவும், ஜே. வி. சின்னையாவும் | நெல்வயல் | 0 | 2 | 6 | 160 |
| B | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 24 | 160 |
| C | ஷை | ஷை | ஷை | 0 | 1 | 32 | 160 |

ஒடுக்குப்பணம் கட்டத்தவறிய நிலங்கள்*. பிளான் இலக்கம் 2,967. குறிச்சி—கரம்பன்.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரன் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | ஏக்கரொன்றுக்கு பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 107:3 | — | வேலுப்பிள்ளை நாகனாதர் வாங்கின காணி | தரிசுநிலம் | 1 | 2 | 18 | 16 |
| 10749 | | கணபதி கண்ணப்புவும் நாகலிங்கம் குளந்தையும் வாங்கிய காணி | தரவை வயல்நிலம் | 1 | 2 | 6 | 16 |
| 10737 | நாகலிங்கம் குளந்தையும் கணபதி முத்துவேலுவும் மறுபேரும் வாங்கின காணி | — | தரிசுத்தோட்டம் | 2 | 2 | 10 | 16 |
| 18808 | தியோகுப்பிள்ளை பேதுறுப்பிள்ளை வாங்கின காணி | — | தென்னம்பிள்ளைக்குத் தகுந்த | 12 | 3 | 0 | 16 |
| 10791 | கதிர்காமர் கந்தையா வாகின காணி | — | நெல்லுச்செய்கைக்குத் தக்க | 0 | 3 | 16 | 16 |
| 10785 | கணபதி சின்னப்பா வாங்கின காணி | — | தரிசுநிலம் | 5 | 0 | 0 | 16 |
| 10782 | நாகலிங்கம் இராமனாதர் வாங்கின காணி | — | ஷை | 2 | 2 | 12 | 16 |
| 10768 | ஆறுமுகம் சோமசுந்தரம் வாங்கின காணி | — | — | — | | — | — |

*ஒடுக்குப் பணம் கட்டத்தவறிய காணிகளுக்கு விற்பனவுத் திகதிக்குமுன் கட்டவேண்டிய காசை வட்டியுடன் கட்டினால் விற்பனவு நிறுத்தப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணத்து கவண்மேந்து ஏசன்றரிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோர் தலைவரிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தர் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஸ்ரீ கார்த்திகைமீ 22 ந் உ.

எச். எல். கிறவ்பொர்டு,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

**No. 1,260, E. P.**—1911 ம் ஆண்டு தைமாதம் 12 ந் திகதி வியாழக்கிழமைப் பகல் தன் ஆபிசில் கீழ் மாகாணத்து திரிகோணமலை உதவி கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் உத்தரவுவண்ணப்பட்டிருக்கும் பொருத்தப் பிரகாரம், ஏலத்திற் கூறி விற்கப்படும். 15 காணித்துண்டுகள், கீழ்மாகாணத்து திரிகோணமலை டிஸ்திறிக்கின் கொட்டியாபுரம் தம்பலகமப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 4,186. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலைஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 237 | இலங்கைத்துறை | சரவணை செல்லன் | தென்னைக்கேற்றது | 3 | 2 | 29 | 18·50 |
| 238 | ஷை | பீ. பெரியதம்பியும் எம். கணபதிப்பிள்ளையும் | ஷை | 4 | 1 | 7 | 17·50 |
| 239 | ஷை | பீ. பெரியதம்பி | ஷை | 2 | 2 | 37 | 15 |
| 240 | ஷை | எஸ். செல்லனால் கூட்டிப்பிடிக்கப்பட்டது | ஷை | 0 | 0 | 10 | 18 |
| 241 | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 30 | 18 |
| 242 | ஷை | செம்பாத்தையாற் கூட்டிப்பிடிக்கப்பட்டது | ஷை | 0 | 0 | 10 | 18 |
| 243 | ஷை | ஷை | ஷை | 1 | 2 | 16 | 18 |
| 244 | ஷை | — | ஷை | 2 | 1 | 22 | 15 |
| 246 | ஷை | வீ. பீ. வேலுப்பிள்ளை | ஷை | 3 | 1 | 27 | 19·50 |
| 247 | ஷை | சித்தன் பெண் சின்னப்பிள்ளை | ஷை | 2 | 2 | 39 | 17·50 |
| 248 | ஷை | எஸ். கணபதிப்பிள்ளை | ஷை | 2 | 2 | 18 | 17·50 |

பிளான் இலக்கம் 4,076. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலைஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 94760 | மூதூர் | ஏ. மீறுவான் | தென்னைக்கேற்றது | 8 | 0 | 14 | 17 |

பிளான் இலக்கம் 2,995. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலைஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 87718 | மூதூர் | — | தென்னைக்கேற்றது | 0 | 3 | 32 | 21 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | ஏக்கரொன்றுக்கு பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 4,153*. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 39 | தம்பலகமம் | சேகுமதார் ஜரிமும், எஸ். நடராசபிள்ளையாலும் கூட்டிப் பிடிக்கப்பட்டது | நெல்வயல் | 0 0 10 | 25 |
| 40 | ஷெ | எஸ். நடராசபிள்ளையும், எஸ். விசுவலிங்கமும் | நெற்கேற்றது | 18 3 37 | 16 |

*இக்காணிகள் கந்தளாய்க்குளத்தால் தண்ணீர்பாய்ச்சப்படும் சதாகால தண்ணீர்வரி ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 1 விகிதம் கொடுக்கவேண்டும்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் திரிகோணமலை உதவி ஏசன்ற ரிடத்திலுமிருந்தும், படங்களைப்பற்றிய விபரங்கள் அளவைத் தலைவரிடத்திலுமிருந் தறிந்துகொள்ளலாம்.

கலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஹூ கார்த்திகமீ 26 ந வ.

எச். எல். கிறுவ்பொர்டு,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT,

### உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Matara Notice No. 3,934.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுக்கு அல்லது அதுகளில் ஏதொன்றுக்காவது ஏதும் உரித்துச்சொல்லுகிறவர்கள் யாருமிருப்பாராகில், அவர்கள் 1910 ம் ஆண்டு டிசம்பர்மீ 2 ந் திகதி துவக்கம் மூன்று மாசத் தவணைக்குள் மாத்துறைக் கச்சேரியில் வைத்து மாத்துறை டிஸ்திறிக்கின் உதவி ஏஜண்ட் துரை அவர்களின் முகதாவில் வெளிப்பட்டு மேற்சொல்லிய காணிகளுக்கு அல்லது அவைகளி ஞெரு பாகங்களுக்கு விருக்கும்படி உரித்தைச் சொல்லி நிக்காவிட்டால் மேல் சொல்லிய உதவி ஏஜண்ட் துரை அவர்களால் அவர்களுக்கு 1897 1899 1900 1903 ம் ஆண்டுகளின் வெங்காணிக் கட்டளைச் சட்டத்தால் கொடுத்திருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் உரித்துச்சொல்லாமல் விட்ட மேற்சொல்லிய காணிகளை அல்லது அதில் உரித்துப்பேசப்படாதவையை அரசாட்சியின் காணிகளென்று அவர்களின் கையொப்பமுள்ள எழுத்தால் கூறப்படுமென்பதை இதனால் அறிந்துகொள்ள வேண்டும்.

டபிள்யு. எல். கிண்டர்ஸ்லி,
உதவி அரசாட்சி ஏஜண்ட்.

காணியின் விபரம்.

தென் மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கு மொறவக்கோறளையில் பள்ளேபத்துவைச்சேர்ந்த அளபாளாதெனியயென்னும் கிராமத்திலிருக்கும் இத்துட னிணைக்கப்படும் உறுதிப்படுத்திய *படப்பிரதிகளில் காணும் காணித்துண்டுகளாவன :—

I.—பிரதம பிளான் 9.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப |
|---|---|---|
| 8a | கமகேகொடவும் மதகொடவும் | 2 0 15 |

எல்லைகளாவன : வடக்கு-தொன் அதிரியன் தகனுயக உரித்துச்சொல்லும் பானிச்சிகேலியத்தை அல்லது மிதிகஹகும்புற, டி. ஜே. டபிள்யு. தகனுயக உரித்துச்சொல்லும் மிதிகஹகும்புறவும் அது அல்லவும்; கிழக்கு-டி. ஜே. டபிள்யு. தகனுயக உரித்துச்சொல்லும் பள்ளேகந்தேகபாதனும ; பனுகளயிலிருந்து மொறவககிபோகும் வழி; தெற்கு-நொம்பர் 145,280 ம் பிகுறுகடதாசியில் காணும் நாவள, நொம்பர் 155,753 ம் பிகுறுகடதாசியில் காணும் மதகொட; நொம்பர் 166,724 ம் பிகுறுகடதாசியில் காணும் மதகொடகேனை ; மேற்கு-தொன் அந்திறிஸ் தகனுயக உரித்துச்சொல்லும் தெல்ககஹவியத்தை.

II.—பிரதம பிளான் 9.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| $9\frac{1}{2}$ | துன்தொலேகேனை | 2 1 35 |
| $9\frac{5}{8}$ | ஷெ | 0 3 10 |
| | | 3 1 5 |

எல்லைகளாவன : வடக்கு-வெண்நிலச்சட்டத்தால் முடிக்குரியதாக்கப்பட்ட கொடகும்புறே கன்தேதொளவும் துன்தொளேகேனையும்; கிழக்கு-தொன் அந்திறிஸ் விஜேசேகர தகனுயகவின் உரித்தாளிகளும் மற்றவரும் உரித்துச்சொல்லுகிற நொம்பர் 239,809 பிகுறில் காணும் துன்தொளேகேனவத்தையும் பதுவத்தயும்; தெற்கு-தொன் அந்திறிஸ் விஜேசேகர தகனுயகவின் உரித்தாளிகளும் மற்றவரும் உரித்துச்சொல்லும் துன்தொளேஹேன பதுவத்தயும் போள்கஸ்வத்தையும்; மேற்கு-அதுஅல்யும் தொன் அந்திறிஸ் விஜேசேகர தகனுயகவின் உரித்தாளிகளும் மற்றவரும் உரித்துச்சொல்லும் அளபளாதெனியாயவும்.

III.—பிரதம பிளான் 9.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| $10\frac{1}{2}$ | துன்தொளேகேனை | 2 2 7 |

எல்லைகளாவன: வடக்கு-வெண்நிலச்சட்டத்தால் முடிக்குரியதாக்கப்பட்ட வளகாவாகேனை ; கிழக்கு-மோதரதுறே தொளி ; தெற்கு-தகனுகஅதுகோறளே தொன் கரோளிசும் மற்றவரும் உரித்துச்சொல்லும் அமுனேகாவாதேனியேகும்புற ; மேற்கு-கொடகும்புறேகே பபப்பும் மற்றவரும் உரித்துச்சொல்லும் கொடகும்புறேவத்தையும் வெண்நிலச் சட்டங்களால் முடிககுரியதாக்கப்பட்ட வடவளகாவஹேனயும்.

IV.—பிரதம பிளான் 9.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| $11\frac{1}{2}$ | வெலேகேனை அல்லது உடமுள்ளேகெதரகேனை | 1 2 30 |

எல்லைகளாவன : வடக்கு-வெண்நிலச்சட்டங்களால் முடிக்குரியதாகிய ஒறபோதகேனையும் வளகேனையும்; கிழக்கு-வெண்நிலச்சட்டங்களால் முடிக்குரிய வளகேனை ; தெற்கு-நொம்பர் 236,434 ம் பிகுறில் காணும் (வலகேனை)யும் தகனுயகஅதுகோறளேகே தொன் கரோளிஸ் உரித்துச்சொல்லும் தெல்கஹவத்தையும்; மேற்கு-தகனுயக அதுகோறளேகே தொன் கரோளிஸ் உரித்துச்சொல்லும் உடமுள்ளேகெதறவத்தை, தகனுயக அதுகோறளேகே தொன் கரோளிஸ் உரித்துச்சொல்லும் ஒறபோதகும்புற.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1167 to 1168 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

V.—பிரதம பிளான் 9.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 13½ | வளகேனே | 0 3 31 |

எல்லைகளாவன: வடக்கு-வெண்நிலச் சட்டங்களால் முடிக்குரிய வளகேனே, நொம்பர் 154,839 ம் பிகுதில் காணும் (வளகேனே); கிழக்கு-நொம்பர் 154,839 ம் பிகுதில் காணும் (வளகேனே)யும் முடிக்குரிய வளகேனேயும்; தெற்கு முடிக்குரிய வளகேனே; மேற்கு-கன்சபா வளி..

VI.—பிரதம பிளான் 9.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 13½a | வளகேனே | 0 0 10 |

எல்லைகளாவன: வடக்கு, கிழக்கு-வெண்நிலச் சட்டங்களால் முடிக்குரிய வளகேனே; மேற்கு, தெற்கு-நொம்பர் 154,839 ம் பிகுதில் காணும் வளகேனே

---

[Tender for Scavenging and Latrine Conservancy, Local Board, Anuradhapura.]

இத்தால் சகலரு மறியவேண்டியது "குப்பை கூளம் கூட்டுதலும் கக்கூசு துப்பரவுபண்ணுகிற கேள்விப்பத்திர" மென்று என்வலோப்பில் எழுதப்பட்டு முத்திரை இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1911 ம் வருஷத்துக்கு இதன்பின்னால் சொல்லப்பட்ட வேலைகளுக்காக 1910 ம் ஆண்டு மார்கழிமாசம் 13 ந் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணி வரையும் லோக்கல்போட்டு அக்கிராசனர் ஏற்றுக்கொள்ளுவார்.

1. கூட்டுதல்.—நாள்தோறும் றவுண் ஸ்ரூட்டுகளையும் கான்களையும் கூட்டுவித்துக் குப்பைகளைச் செயர்மன் துரை காலத்துக்குக்காலம் குறிக்கு மிடங்களுக்குக் கரத்தையிலேற்றிக் கொண்டுபோக வேண்டியது.

2. கக்கூசு துப்பரவுபண்ணுதல்.—செயர்மன் துரையால் குறிக்கப்பட்ட மணித்தியாலத்துக் கிடையிலும் காலத்துக்குக்காலம் குறிக்கப்படும் இடங்களிலும், பிரசித்தக் கக்கூசுகளிலும், சனங்களின் கக்கூசுகளிலும் இருந்து மலத்தை யெடுத்துக் கொண்டுபோய் அடக்கம்பண்ண வேண்டியது. மேலும் கக்கூசுகளை நன்ருய்த் துப்பரவுபண்ணி துர்நாற்றத்தை அகற்றும் மருந்துவகைகள் போடவேண்டியது.

3. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் வேலையைச் சரியாய் நிறைவேற்றுவதற்காக கேட்ட கேள்வித்தொகையில நாலிலொரு பங்கு பணம் கட்டவேண்டும்.

4. அக்கிராசனர் குறைந்த அல்லது எந்தக் கேள்வியையாவது ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடு செய்துகொள்ளவில்லை.

இதைப்பற்றிய விபரங்களை லோக்கல்போடு ஆபிசில் கேட்டறிந்துகொள்ளலாம்.

ஜே. டீ. பிறவுண்,
அக்கிராசனர்.

லோக்கல் போட்டு ஆபிஸ்,
1910 ம் ஆண்டு கார்த்திகைமீ 11 ந் உ.

---

[Tender for lighting Street Lamps, Local Board, Anuradhapura.]

விளம்பரம்.

இத்தால் அறிவிப்பது 1911 ம் ஆண்டுக்குத் "தெரு லாம்புகள் கொழுத்துவதற்காக் கேள்விப்பத்திர" மென்று என்வலோப்பில் எழுதப்பட்டு முத்திரை இடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், 1911 ம் ஆண்டுக்கு, அனுராசபுரப் பட்டணத்திலுள்ள, 31 லாம்புகளும் இதன் பின்னால் காணும் முறைப்படி கொழுத்துவதற்காக, 1910 ம் ஆண்டு மார்கழிமாசம் 13 ந் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணி வரையிலும் லோக்கல்போட்டு அக்கிராசனர் ஏற்றுக்கொள்ளுவார்.

1. பின்னால் சொல்லப்படும் காலங்களைத்தவிர மற்றக் காலங்களில், நிலாவில்லா நேரமெல்லாம் இராப் பதினொரு மணி வரைக்கும் விளக்குக்கொழுத்தி இருக்கவேண்டும்.

2. எல்லா லாம்புகளும் நிலாவிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஐப்பசி, கார்த்திகை, மார்கழிமாசங்களில் இரா ஆறுமணி துவக்கம், 11 மணி வரைக்கும் கொளுத்தவேண்டும்.

3. ஆசுபத்திரிக்குக் கிட்டேயிருக்கும் லாம்பும், கோட்டல் சந்திப்பிலிருக்கும் லாம்பும், குருணகல் சந்திப்பிலிருக்கும் லாம்பும், நிலாவிருந்தாலும் இல்லாவிட்டாலும், வருஷம் முழுதும், சாயந்தரம் ஆறுமணி துவக்கம் விடிய ஆறுமணிமட்டும் கொழுத்தவேண்டும்.

4. றயில் ஸ்ரேசனில் கரைத்தைகள் நிற்குமிடத்திலிருக்கும் லாம்பு, வருஷம் முழுதும், ஆறுமணி துவக்கம் ஒன்பது மணிமட்டும், அல்லது இரா றயில்வண்டில் வருமட்டும் கொழுத்தவேண்டும்.

5. கொந்திருத்துக்காரன்தானே, லாம்புகள் பழுதுபார்க்கவும், தீந்தைபூசவும், உடைந்த சிமினிக்கு வதல் சிமினி போடவும், உடைந்த திரிபோடும் காய்க்கு வதல் காய்போடவும், புதுத் திரி தேள்வையானநேரம் போடவும் வேண்டும்.

6. கொந்திருத்துக்காரன் தனது கேள்வித்தொகையில் நாலிலொருபங்கு காசுப்பிணைகட்டி ஒரு உடன்பிடிக்கை உறுதி எழுதிக்கொள்ளவேண்டியது, அவ்வுறுதிச்செலவை கொந்திருத்துக்காரன்தானே பொறுக்கவேண்டும்.

7. அக்கிராசனர் குறைந்த, அல்லது எந்தக்கேள்வியையாகுதல் ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடு செய்துகொள்ளவில்லை.

8. இன்னும் இதைப்பற்றிய விபரங்களை லோக்கல்போட்டு ஆபீசில் கேட்டறிந்துகொள்ளலாம்.

ஜே. டீ. பிறவுண்,
அக்கிராசனர்.

லோக்கல்போட் ஆபிஸ்,
1910 ம் ஆண்டு கார்த்திகைமீ 25 ந் உ.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.